**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கடலூர்.**

முன்னிலை: **திரு. G. விஜயகுமார்**, B.Sc., LL.M.,
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி

**2024-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 23-ஆம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.147/2014-ல்**

**வழக்கிடை மனு எண்.212/2024**

( CNR No. TNCD01 - 001884-2014)

V. லோகநாதன் .. மனுதாரர் / வாதி

/எதிராக/

P. சண்முகம் ... எதிர்மனுதாரர் /பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பு 19.10.2024 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K. தம்புராசா அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K. கோடீஸ்வரன் அவர்களும், முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

**உத்தரவு**

மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட DW.1-ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி, மனுதாரர் உவிமுச கட்டளை 18 விதி 17 - ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்.

**2.** **மனுவின் சுருக்கம் பின்வருமாறு** :

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மனுதாரர் / வாதி தாவா தொகையை திரும்ப பெறுவதற்காக எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி அசல் வழக்கில் DW1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக 14.03.2022 அன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் மனுதாரரின் வழக்கறிஞர் உள்ளூரில் இல்லாததால் DW1 ஐ குறுக்கு விசாரணை

செய்ய இயலவில்லை. அதனால், DW1 தரப்பில் அன்றைய தினம் விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் வேண்டுமென்றே அலட்சியமாக இருக்கவில்லை. DW1 மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியமும் நியாயமுமாய் உள்ளது. இம்மனுவினை அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு மிகுந்த நஷ்டமும் உண்டாகும். எனவே, மனுப்படி உத்தரவாக வேண்டுமாய் பிரார்த்திக்கிறார்.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :

மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் முற்றிலும் தவறானவை. மேற்படி அசல் வழக்கில் DW1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக 15.12.2021, 21.12.2021, 05.01.2022, 07.02.2022, 24.02.2022 மற்றும் 14.03.2022 ஆகிய தேதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. DW1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரருக்கு பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டும், மனுதாரரோ அல்லது அவரது வழக்கறிஞரோ நீதிமன்றத்தில் ஆஜராகி DW1 ஐ குறுக்கு விசாரணை செய்யாததால், மேற்படி வழக்கில் DW1 தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு, மேற்கொண்டு சாட்சிகள் விசாரிப்பதற்காக பிரதிவாதி தரப்பில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வழக்கறிஞர் 14.03.2022 அன்று உள்ளூரில் இல்லை என்பதை ஆவண ஆதாரத்துடன் நிரூபிக்க மனுதாரர் கடமைப்பட்டவர் ஆவார். வழக்கை தாமதப்படுத்துவதற்காகவே மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி தரப்பில் DW1 ஐ விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யவதற்காக மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு எதிர்மனுதாரரை துன்புறுத்துவதாக உள்ளது. எனவே, இந்த மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாதெனில்</u> :

மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதேயாகும்.

<u>பிரச்சனை</u> :

5. இந்த மனு பிரதிவாதி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட DW1-ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர் / வாதி மனு தாக்கல் செய்துள்ளார்.

6. இருதரப்பும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், தாவா தொகையை திரும்ப பெறுவதற்காக பிரதிவாதிக்கு எதிராக மனுதாரர்/ வாதி தாக்கல் செய்துள்ள மேற்படி அசல் வழக்கில், DW1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக 14.03.2022 அன்று வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி தேதியில் மனுதாரரின் வழக்கறிஞர் உள்ளூரில் இல்லாததால் DW1 ஐ குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்றும், DW1 ஐ வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால் 14.03.2022 அன்று DW1 தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டது என்றும், எனவே, பிரதிவாதி தரப்பில் விசாரணை செய்து முடிக்கப்பட்ட DW1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியமும் நியாயமுமாய் உள்ளது என்றும், எனவே இம்மனுவை அனுமதிக்கும்படி கோரியுள்ளார். கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர், அசல் வழக்கில், DW1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக பலமுறை வாய்ப்புகள் கொடுக்கப்பட்டும், DW1 ஐ குறுக்கு விசாரணை செய்யாததால், DW1 தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மனுதாரரின் வழக்கறிஞர் 14.03.2022 அன்று உள்ளூரில் இல்லை என்பதற்கான ஆவண ஆதாரம் எதையும் மனுதாரர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்றும், எனவே, இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்றும் வாதிட்டுள்ளார். அசல் வழக்கானது மனுதாரர் / வாதியால் தாவா தொகையை திரும்ப பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், பிரதிவாதி தரப்பில் பிரதிவாதியை DW1 ஆக விசாரணை செய்யப்பட்டு, DW1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக மனுதாரர்/ வாதி தரப்பிற்கு பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டும் DW1 ஐ குறுக்கு விசாரணை செய்யாததற்கு மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. இருப்பினும், அசல் வழக்கானது தாவா தொகையை திரும்ப பெறுவதற்காக பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதுசம்மந்தமாக முதல் விசாரணை செய்து முடிக்கப்பட்ட DW1-ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின்பால் அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுவதால், இந்த மனு நிபந்தனையுடன் அனுமதிக்கத்தக்கது என்று இம்மனுவில் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுகிறது.

7. முடிவாக, மனுதாரர், எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு ரூ.1,000/-ஐ வரும் 04.11.2024 அன்று மாலை 4.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பு செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா தேதி 04.11.2024.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரிடையாக உரைக்கப்பட்டு, அவரால் நேரிடையாகக் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 23-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VIJAYAKUMAR Digitally signed by VIJAYAKUMAR Date: 2024.10.23 16:56:33 -0200

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
கடலூர்.

<u>**இணைப்பு**</u> :

<u>**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> : இல்லை

VIJAYAKUMAR Digitally signed by VIJAYAKUMAR Date: 2024.10.23 16:56:42 -0200

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
கடலூர்.